

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் பொதுப்பணித்துறை நீர்வள தலைமை பொறியாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டு வரும் பெருந்தலைவர் கு.காமராஜர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், வி.கே பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரது திரு உருவச்சிலை மற்றும் அரங்கம் அமைக்கும் இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று (19.07.2025) பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அருகில் தமிழ்நாடு அரசின் முதன்மை செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ரங்கநாதன், செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### கூட்டணி ஆட்சி என்று கூறும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமிக்கு

# தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?

## அமைச்சர் கே.என்.நேரு காட்டமான அறிக்கை!

சென்னை, ஜூலை 20-

பழனிசாமி விரித்திருப்பது ரத்தினக் கம்பளம் அல்ல. பா.ஜ.க.வின் பாசிச ரத்தக் கம்பளம் என்பதை தி.மு.க.வின் தோழமைக் கட்சிகளும் மக்களும் அறிவார்கள். கோவையில் பேசியவரும் சிதம்பரத்தில் பேசியவரும் ஒரே ஆளா?' என்று வாக்காளர் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். கூட்டணி ஆட்சி என்று மூச்சுக்கு முப்பது தடவை சொல்லிக் கொண்டிருக்கும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா? என நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் பயணம் போய்க் கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தினம் தினம் கேலிக் கூத்துகளை அரங்கேற்றி நெட்டிசன்களுக்கு ட்ரோல் மெட்டிரியல் ஆகிக் கொண்டிருக்கிறார்.

**பழனிசாமியின் மகனைக் காப்போம்! சம்பந்தியை மீட்போம்!**

'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பைத் தயவு செய்து மாற்றிவிடுங்கள் பழனிசாமி அவர்களே! 'சம்பந்தியை மீட்டோம்; சம்பாதித்த பணத்தைக் காப்போம்!', 'மக்களை மறப்போம்; தமிழ்நாட்டை விற்போம்!', 'மகனைக் காப்போம்; சம்பந்தியை மீட்போம்' எனத் தலைப்பை மாற்றிக் கொண்டு பழனிசாமி பா.ஜ.க. அடிமை பயணத்தைத் தொடங்கலாம்.

பா.ஜ.க. கூட்டணியை விட்டு விலகுவது போல 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு நாடகத்தை அரங்கேற்றி, கூட்டணிக் கட்சிகளை அ.தி.மு.க.வில் சேர்க்க முயன்றார் பழனிசாமி. ஆனால், அது கைகூடவில்லை. அதன் பிறகு தொடர்ச்சியாக தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை அழைத்துக் கொண்டே இருந்தார். ஒரு கட்சிகூட அ.தி.மு.க. அணியில் சேரவில்லை.

“2026 தேர்தலில் பலமான கூட்டணியை அமைப்பேன்; வெற்றிக் கூட்டணி அமையப் போகிறது; தொண்டர்கள் எதிர்பார்க்கும் கூட்டணி அமையும்; பா.ஜ.க. அல்லாத கட்சிகளுடன் கூட்டணி' என்றெல்லாம் தொடர்ந்து பழனிசாமி உருட்டிக் கொண்டே இருந்தார். 'நீ உருட்டுப்பா... உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லதா நடக்கும்' என பழனிசாமியை உசுப்பேத்தி உசுப்பேத்தி உடம்பை ரணகளம் ஆக்கியதுதான் மிச்சம். கூட்டணியை உருவாக்கக் கூடிய பழனிசாமியின் ஆளுமைதான் சரிந்து தொங்கியது!

ஆனால், அ.தி.மு.க.வின் கூட்டணி கணக்கை டெல்லியில் இருக்கும் பழனிசாமியின் முதலாளிகள் போட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியில் கடந்த ஏப்ரல் மாதம் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா சென்னை வந்து, கூட்டணியை அறிவித்து விட்டுப் போனார்.

ஆனால், கூட்டணிக்குத் தலைமை தாங்குவதாகத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி நாட்டாமை படத்தில் கவுண்டமணிக்கு பெண் பார்க்கும் காட்சியில் ஒருவர் மிக்ஸர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் போல அமித்ஷா பக்கத்தில் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

**கூட்டணிக்கு ஆள் சேர்க்கும் பழனிசாமி!**

அ.தி.மு.க. கூட்டணி அமைந்தாலும் அதனை 'திமுக கூட்டணி' என்று அ.தி.மு.க.வினரைத் தவிர மற்றவர்கள் யாருமே சொல்வதில்லை. அ.தி.மு.க., பா.ஜ.க., த.மா.கா. தவிர அந்தக் கூட்டணியில் வேறு யாருமே இல்லாததால், 'மக்களை மறப்போம்; தமிழ்நாட்டை விற்போம்!' பயணத்தில் கூட்டணிக்கு மீண்டும் ஆள் பிடிக்க இறங்கிவிட்டார் பழனிசாமி. 'பிரமாதமான கட்சி எங்கள் கூட்டணிக்கு வரப் போகிறது' என்று ஆருடம் சொல்லிக் கொண்டிருக்கிறார். ரத்னக் கம்பளத்தைத் தூக்கிக் கொண்டு திரிகிறார்.

கோவை பயணத்தில், “கம்யூனிஸ்ட் கட்சி கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டே செல்கிறது. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதா? இல்லையா? என்று முகவரி இல்லாமல் இருக்கிறது” என்று பேசியவர், சிதம்பரம் பயணத்தில், கூட்டணியில் சேர வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கிறார். 'எங்கள் கூட்டணியில் சேர்ந்தால் ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்போம்' என்கிறார். 'கோவையில் பேசியவரும் சிதம்பரத்தில் பேசியவரும் ஒரே ஆளா?' என்று வாக்காளர் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**ரத்தினக் கம்பளம் அல்ல ரத்தக் கம்பளம்!**

பழனிசாமி விரித்திருப்பது ரத்தினக் கம்பளம் அல்ல. பா.ஜ.க.வின் பாசிச ரத்தக் கம்பளம் என்பதை தி.மு.க.வின் தோழமை கட்சிகளும் மக்களும் அறிவார்கள்.

அதனால்தான் பழனிசாமியின் அழைப்பைக் கம்யூனிஸ்ட்டுகளும் விடுதலைச் சிறுத்தைகளும் நிராகரித்திருக்கின்றன.

பா.ஜ.க.வோடு அ.தி.மு.க. கூட்டணி வைப்பதற்குச் சில நாட்கள் முன்பு கூட, 'தி.மு.க. கூட்டணியில் இருக்கிற கட்சிகள் எந்தக் காலத்திலும் வளராது' என விரக்தியாக பழனிசாமி சாபம் இட்டார். அப்படிப் பேசிய நாக்குதான், பிறகு கூட்டணிக்காகக் கெஞ்சின.

2004 நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகளை 'தத்துவப் பச்சோந்திகள்' என மிகக் கீழ்த்தரமாக விமர்சித்தார் ஜெயலலிதா. அவருடைய வழியில் பழனிசாமி, 'கம்யூனிஸ்ட் கட்சியினர் தி.மு.க.விடம் பணம் வாங்கியபோதே அவர்களது கதை முடிந்துவிட்டது” என மோசமாகப் பேசுகிறார்.

**பழனிசாமி பா.ஜ.க.வை விமர்சித்ததுண்டா!**

இப்படி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை விமர்சிக்கும் பழனிசாமி, என்றைக்காவது பா.ஜ.க.வை விமர்சித்திருக்கிறாரா? கூட்டணி ஆட்சி என்று மூச்சுக்கு முப்பது தடவை சொல்லிக் கொண்டிருக்கும் அமித்ஷாவிற்கு பதிலடி தர முடியாத கோழை பழனிசாமி தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?

“அமித்ஷா வீட்டின் கதவைத் தட்டினால்தான் தமிழ்நாட்டு மக்களின் பிரச்னை தீரும். அதனால் நாங்கள் அவர் வீட்டின் கதவைத் தட்டினோம்” என்று வெட்கமே இல்லாமல் சொல்கிறார் பழனிசாமி. அமித்ஷா வீட்டிற்குப் போவதாக இருந்தால் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே! எதற்காக மக்கள் பிரச்சினையை பேச கார்களில் மாறி மாறிப் போக வேண்டும்? 'டெல்லி அதிமுக அலுவலகத்தைப் பார்க்க வந்தேன்' என ஏன் பொய் சொல்ல வேண்டும்?.

தோல்வி மேல் தோல்வியடைந்து வரும் பழனிசாமி 2026 சட்டமன்றத் தேர்தலிலும் படுதோல்வி அடைவார் என்பது உறுதியானதால்தான் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி கூட்டணிக் கட்சிகளுக்கு ஆள் பிடிக்க பஸ்சில் பயணிக்கிறார்.

2021 தேர்தலில் பழனிசாமியின் பச்சைப் பொய்களை நம்பாமல், புறந் தள்ளிய மக்கள், 2024 நாடாளுமன்றத் தேர்தலைப் போல 2026 தேர்தலிலும் பித்தலாட்ட பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியைப் புறக்கணித்து நம்பிக்கை நாயகனான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் அரியணையில் ஏற்றுவார்கள். மக்களின் பேராதரவோடு திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடரும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருப்பூர் மாநகராட்சி கோவில் வழியில் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ்

# ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கோவில்வழி புதிய பேருந்து நிலையம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர், ஜூலை 20-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி கோவில் வழியில் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கோவில்வழி புதிய பேருந்து நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் திருப்பூர் மாவட்டத்திற்கு 22.07.2025 மற்றும் 23.07.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் அரசு நிகழ்ச்சி களில் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். திருப்பூர் மாநகராட்சி கோவில் வழியில் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோவில்வழி புதிய பேருந்து நிலையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் (22.07.2025) அன்று திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவுள்ளதை முன்னிட்டு இன்றைய தினம் கோவில்வழி புதிய பேருந்து நிலையம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோவில் வழி பேருந்து நிலையம் திருப்பூரிலிருந்து குறிப்பாக மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி உள்ளிட்ட தென்மாவட்ட பகுதிகள் மற்றும் பிற பகுதிகளுக்கும் பொதுமக்கள் செல்வதற்கு வசதியாக இப்பேருந்து நிலையம் திருப்பூர் தாராபுரம் சாலையில் ஏறத்தாழ 245 பேருந்துகள் வந்து செல்லும் வகையிலும், ஒரே நேரத்தில் 45 பேருந்துகள் நிறுத்தி வைக்கப்படும் வகையிலும், பொதுமக்கள் பொருட்களை வாங்கி செல்வதற்காக 35 கடைகளும், இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், நவீன கழிப்பிட வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையம் திருப்பூர் மாவட்ட மக்களுக்கு மட்டுமின்றி பிற மாவட்ட மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையர் எம்.பி அமித், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர காவல் துணை ஆணையர் தீபா சத்தியன், துணை ஆணையர் (திருப்பூர் மாநகராட்சி) மகேஸ்வரி, உதவி ஆணையர் (பொ) ராஜசேகர், தலைமை பொறியாளர் முகமது சபியுல்லா, திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி மு.நாகராசன், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், மாநகராட்சி 3ம் மண்டலத் தலைவர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.கோவிந்தசாமி, மாவட்ட துணை செயலாளர், பொங்கலூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார், கிழக்கு மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், பல்லடம் நகர கழக செயலாளர் ந. ராஜேந்திரகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உகாயனூர் பி.கே.கனகராஜு, முத்தணம்பாளையம் பகுதி கழக செயலாளர் எஸ்.என்.குமார், வீரபாண்டி பகுதி செயலாளர் கோவிந்தராஜ், பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். பாலுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஈ.பால சுப்பிரமணியம், வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார்,

வட்டக் கழக செயலாளர்கள் கேபிள் ராஜேந்திரன், கேசவன், சிவசாமி, மாமன்ற உறுப்பினர்கள் வரிவிதிப்புக்குழு தலைவர் கு.கோமதிகுமார், புது சுகாதார குழு பணி குழு உறுப்பினர் பந்தல் இரா.சாமிநாதன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் கே. பி.கே.ஜெகநாதன், ஆடிட்டர் முத்துராமன், மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி வி.பி.மகேந்திரன், பொங்கலூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் தொப்பம்பட்டி லோகு, சௌந்தர், வேலுச்சாமி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் நீர் பற்றாக்குறையை தீர்க்க

# கீழ் பவானி அணையிலிருந்து ஆகஸ்ட் 1 முதல் நீர் திறந்து விடக்கோரிக்கை!

## தமிழ்நாடு முதலமைச்சருக்கு கார்த்திகேய சிவசேனாபதி வேண்டுகோள்!

ஈரோடு, ஜூலை 20-

ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் நிலவும் நீர் பற்றாக்குறையை தீர்க்க, கீழ் பவானி அணையிலிருந்து தற்போது திட்டமிடப்பட்ட ஆகஸ்ட் 15, 2025க்கு பதிலாக ஆகஸ்ட் 1, 2025 முதல் நீர் திறந்து விடக்கோரி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர், விவசாயிகளின் விடிவெள்ளி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், அயலகத் தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விவசாயிகளின் விடிவெள்ளியாக விளங்கும் தங்களின் உயர்ந்த தலைமையில் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் பயணித்து வருவதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் மழைப்பொழிவு குறைவாக இருப்பதால் ஏற்பட்டுள்ள நீர் பற்றாக்குறையை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். மேற்கு தமிழ்நாட்டின் மழை நிழல் பகுதியில் அமைந்துள்ள இம்மாவட்டங்கள், பருவ மழையில் போதிய மழையின்மையால் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு நீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. சமீபத்திய தகவல்களின்படி, ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு உயிர்நாடியாக விளங்கும் கீழ் பவானி அணையில் தற்போது 96.20 அடி நீர் மட்டமும், 25.85 டி.எம்.சி. நீர் இருப்பும் உள்ளது. (ஜூலை 14, 2025 நிலவரப்படி), இது மொத்த கொள்ளளவான 32.8 டி.எம்.சி.யில் கணிசமான அளவாகும். மேற்கு தொடர்ச்சி மலைகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்ட மழையால் இந்த நீர் இருப்பு கிடைத்துள்ளது.

இம்மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் கீழ் பவானி திட்ட கால்வாயை மிகவும் நம்பியுள்ளனர். மழை நிழல் பகுதியாக இருப்பதால், ஆகஸ்ட் 15, 2025ல் திட்டமிடப்பட்ட நீர் திறப்பு, விவசாய நடவடிக்கைகளை தாமதப்படுத்தி, பயிர் திட்டமிடல் மற்றும் வாழ்வாதாரத்தை பாதிக்கக்கூடும். இதனை கருணை உள்ளத்துடன் தாங்கள் கருத்தில் கொண்டு, கீழ் பவானி அணையிலிருந்து நீர் திறப்பை ஆகஸ்ட் 15, 2025க்கு பதிலாக ஆகஸ்ட் 1, 2025 முதல் தொடங்க உத்தரவிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இந்த முன்கூட்டிய நீர் திறப்பு, ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்து, வறட்சி போன்ற சூழலை தவிர்க்க உதவும். தங்கள் தலைமையில் விவசாயிகளின் நலனை காக்கவும், இம்மாவட்டங்களில் நீர் பாதுகாப்பை உறுதி செய்யவும் உரிய நடவடிக்கைகள் எடுக்க நீர்வளத்துறைக்கு தேவையான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், அயலகத் தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதியில் உள்ள பொதட்டூர்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 15 லட்சத்தில் கலையரங்கம் அமைக்கும் பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டில் பணியை துவக்கி வைத்தார். இதில் மாநில நெசவாளர் அணி துணைத் தலைவரும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஓ. ஏ. நாகலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஜி. ரவீந்தரா, என். கிருஷ்ணன், டி.ஆர். கே. பாபு, நிர்வாகிகள் இ.கே. உதயசூரியன், டி.எம்.சுகுமார், பி.டி.வாசு, பி.ஜி. சிவகுமார், சஞ்சய், சிவகுமார்,கோபி, உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்

### பேராசிரியர் தி.இராசகோபாலன் எழுதிய

# 'கலைஞரின் பேனா' நூல் அறிமுக விழா!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெறுகிறது!

திருச்சி, ஜூலை 20-

பேராசிரியர் தி.இராசகோபாலன் எழுதிய 'கலைஞரின் பேனா' நூல் அறிமுக விழா இன்று (20.07.2025 - ஞாயிறு) மாலை 6.30 மணிக்கு திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கத்தில் நடைபெற உள்ளது.

விழாவில் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் பெ.உதயகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி தலைமை வகிக்கிறார்.

கவிதா ஜவகர், மேனாள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பெரும் பேராசிரியர் டாக்டர் பழனி அரங்கசாமி ஆகியோர் நூல் திறனாய்வு செய்கின்றனர்.

விழாவில் பேராசிரியர் தி. இராசகோபாலன் ஏற்புரையாற்றுகிறார்.

புலவர் இரா. வரதராசன் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம், துணைத் தலைவர் நன்றி கூறுகிறார்.

### எஸ்.கே.எஸ்.சிக்கந்தர் பாபு தலைமையில் – திருச்சி குண்டு பிலால் முன்னிலையில்

# சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டம்!

## 100–க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சவூதி, ஜூலை 20-

சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம் ஜூலை 4-ஆம் தேதி கோபார் நகரத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியை அயலக அணி கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமையில் கிழக்கு மாகாணதுணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் இளைஞர் அணி அஷ்ரஃப்தீன், மகளிர் அணி திருமதி. பரிதா பானு மற்றும் பொறுப்பாளர்கள் ஆகாமது கபீர், சிவகுமார், ஆனந்தராஜ், ராபர்ட், இம்ரான், வினோத், திருமதி. தௌலத், திருமதி. சபர்மதி, மற்றும் நிஹாரா், அஜ்மல், சலாவுதீன், சையத் அலி, சுல்தான், அப்துல் பாசித், சவுதி வாசி ரஃபி, ஜின்னா, சிவா, கலீஃபா, அசார், நிசார், ரியாஸ், ஃபஹத், முகமது சேத்தப்பா, பீர் முகமது, சகாயராஜ் சத்யராஜ், சோழராஜன், ராஜேஷ், சதாம், முகமது ரவூஃப், அஹ்மத், மர்ஜூன், ரியாஸ் மற்றும் மாணிக்கம் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 – 16 மற்றும் 17வது வார்டு பொதுமக்களின் அரசின் சேவைகள் திட்டங்களை அவர்கள் பகுதியிலேயே வழங்கிடும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று உரிய துறைகளிடம் வழங்கினார். அப்பொழுது மேயர் க.வசந்தகுமாரி, ஆணையர் சி.பாலச்சந்தர், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, இணை ஆணையர், உதவி ஆணையர், நகராட்சி அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.